**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**M.C.O.P.No.140/2023**

**தேதி : 25.08.2025**

**(ம.சா.1) – திரு . மதன்குமார்**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை : (1 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில்)**

1. முதல் தகவல் அறிக்கையை என்னிடமிருந்து பெற்ற புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கிழக்கிலிருந்து மேற்காக சென்றபோது 1ம் எதிர்மனுதாரர் என் பின்னால் வாகனத்தை ஓட்டி வந்து மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டதாக புகாரில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் வலதுபுறமாக திரும்பும்போது விபத்து ஏற்படுத்திவிட்டதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். நான் 1ம் எதிர்மனுதாரர் முன்னால் செல்லும்பட்சத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை வலதுபுறமாக திருப்பினால் விபத்து ஏற்பட வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல.

2. நான்தான் வாகனத்தை தாறுமாறாக இயக்கி விபத்தை ஏற்படுத்திவிட்டு இழப்பீடு பெறுவதற்காக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளதால் 1,3 எதிர்மனுதாரர்கள் இழப்பீடு கொடுக்கக் கடமைப்பட்டவர்கள் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. விபத்து சம்பந்தமாக மாதிரி வரைபடம் மற்றும் நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் ஆய்வறிக்கை ஆகிய ஆவணங்களை பெற்றேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் என்னுடைய ஓட்டுனர் உரிமம் , நான் ஓட்டிச்சென்ற மோட்டார் வாகனத்தின் காப்பீட்டுச் சான்று மற்றும் பதிவுச்சான்று ஆகியவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் மேற்படி ஆவணங்கள் என்னிடம் உள்ளது. ஓட்டுனர் உரிமம் மற்றும் காப்பீடு இல்லாததால்தான் மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. மாதிரி வரைபடம் மற்றும் என்னுடைய வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை வழக்கிற்கு விரோதமாக இருப்பதால் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்து என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 12.05.2023 முதல் 18.05.2023 வரை பழனி வேல் மருத்துவமனையில் நான் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன் என்றால் சரிதான். 04.11.2023 முதல் 08.11.2023 வரை உள்நோளியாக சிகிச்சை பெற்றேன் என்றால் சரிதான். அதற்கு இடைப்பட்ட காலத்தில் நான் தொடர் சிகிச்சை பெற்றதாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், நான் மருந்து மாத்திரைகள் உட்கொண்டு சிகிச்சைக்கு சென்று வந்தேன்.

3. 08.11.2023 தேதிக்குப்பின்னர் நான் தொடர் சிகிச்சை பெற்றதாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் எல்லாம் 2023ம் ஆண்டிலேயே முழுமையாக குணமாகிவிட்டது என்றும், அதனால்தான் தொடர் சிகிச்சைக்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் தலைக்கவசம் அணிந்து சென்றதாக முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எவ்வித பாதிப்பும் இல்லாததால்தான் நான் தொடர்சிகிச்சை பெறவில்லை என்றால் சரியல்ல.

4. நான் பி.காம். சி.ஏ படித்ததற்கோ, டியூசன் எடுத்து மாதம் ரூ.30,000/- சம்பாதித்ததாக சொல்வதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மருத்துவ பில்களை வழக்கிற்காக மிகைப்படுத்தி தாக்கல் செய்துள்ளதாகச் சொன்னால் சரியல்ல. விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தை இயக்கிய 1ம் எதிர்மனுதாரர் பிரபுசூரியாவிற்கு எவ்வித ஓட்டுனர் உரிமமும் இல்லை என்றும், அதனால் திருத்தப்பட்ட மோட்டார் வாகன சட்டப்படி விதிமுறை மீறல் ஏற்பட்டுள்ளது என்றும், 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு செலுத்தக் கடமைப்பட்டவர் அல்ல என்றும், நான் கோரியுள்ள இழப்பீடு அதிகப்படியானது என்றும் சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :- இல்லை.

K. BHARATHI
Digitally signed by K. BHARATHI
Date: 2025.08.25 19:39:13 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.